ඩාබිඳු සාමූහික සංගමය
டாபிந்து கூட்டு ஒன்றியம்
DABINDU COLLECTIVE UNION

**அனைவருக்கும் கௌரவத்துக்குரிய வேலை – சமூக நீதியும் பொருளாதார முன்னேற்றமும்!**

**சர்வதேச தொழிலாளர் தினம் 2026 – கட்டுநாயக்க**

**டாபிந்து கூட்டு ஒன்றியம் – சர்வதேச தொழிலாளர் தின அறிக்கை**

நாற்பத்து மூன்று ஆண்டுகளாக, டாபிந்து கூட்டு ஒன்றியம் இலங்கையின் ஆடைத் தொழில்துறையில் வேலைசெய்யும் பெண் தொழிலாளர்களுடன் இணைந்து நிற்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக, பெண்கள் வழிநடத்தும் தொழிற்சங்க அமைப்பை வலுப்படுத்தியுள்ளோம். 2026 ஆம் ஆண்டில், சுதந்திர வர்த்தக வலயத்தின் மையமான கட்டுநாயக்கவில் ஆடைத்துறை, மீன்வளம் மற்றும் தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டு பெண் உரிமைக்காக செயற்படும் சிவில் சமூக அமைப்புகளுடன் சேர்ந்து சர்வதேச தொழிலாளர் தினத்தை நினைவுகூருகிறோம்.

இந்த ஆண்டு, நாம் ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

ஆடைத்தொழில் துறை தன் பாரத்தை தொழிலாளர்களின் மீது தள்ளுகிறது. உலகளாவிய பிராண்டுகள், தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் அரசு அவர்களின் இலாபத்தை பாதுகாப்பதற்காக வேலை நிலைத்தன்மையின்மை, சம்பள ஒடுக்கம் மற்றும் வேலை இழப்பை பெண் தொழிலாளர்களின் மீது தள்ளுகின்றனர். தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. உற்பத்தி இலக்குகள் அதிகரிக்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் மேலும் பாதுகாப்பற்றவையாகின்றன. தொழிலாளர்கள் பயன்படுத்திவிட்டு தள்ளப்படும் பொருட்களாக நடத்தப்படுகின்றனர்.

உண்மையில் இது அனைவருக்குமான “பொருளாதார நெருக்கடி” அல்ல. இது தொழிலாளர்களுக்கு திணிக்கப்பட்ட நெருக்கடி.

இன்று, சுரண்டல் அமைப்புக்கள் உலகளாவிய பொருளாதார நிலையற்ற தன்மையாலும், போர்கள், இராணுவமயமாக்கல் மற்றும் புவியியல், அரசியல் வர்த்தக மோதல்களாலும் தீவிரமடைந்துள்ளது. இவை உலகளாவிய உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலிகளை பாதிக்கின்றன. அதே நேரத்தில் தொழிலாளர் சுரண்டலை அதிகரிக்க பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை போன்ற ஆடை உற்பத்தி நாடுகள் அதிகமான அசாதாரண நிலையை எதிர்கொள்கின்றன. இதனால் வாழ்வாதாரம் குறைதல், வேலை இழப்பு மற்றும் பாதுகாப்பின்மை அதிகரிக்கப்படுகிறது.

இந்த மோதல்களின் தாக்கம் உடனடி தடைகளையும் மீறி அதிகரிக்கிறது. இது பொருளாதாரத்தை பாதித்து தொழிலாளர்களை மேலும் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளுகிறது.

No. 221, Welaboda Road, Katunayake, Sri Lanka.
Tel: +94 11 4 851 383 | Email: dabindu.infoco@gmail.com | Web: www.dabinducollective.org | Registration No - 9194

இதற்கு பதிலாக உலகளாவிய பிராண்டுகள் தங்கள் இலாபத்தைப் பாதுகாக்க ஒப்பந்தங்களை இரத்து செய்கின்றன அல்லது குறைக்கின்றன, கட்டணங்களை தாமதப்படுத்துகின்றன, மற்றும் உற்பத்தியை நாடுகளுக்கு இடையில் மாற்றுகின்றன. இந்த சுமை சமமாகப் பகிரப்படவில்லை. இது தொழிற்சாலைகள் வழியாக இறுதியில் தொழிலாளர்களின் மீது சுமத்தப்படுகிறது.

பல தசாப்தங்களாக, பெண் தொழிலாளர்கள் தங்கள் குறைந்த கூலி, ஊதியமில்லா பராமரிப்பு வேலை, மற்றும் உடல்நல தியாகங்களால் இந்தத் துறையைத் தாங்கி வந்துள்ளனர்.

இதனை நாம் எதிர்க்கின்றோம்.

சுரண்டலின் இயல்பாக்கம் தொடர்கிறது:

- சட்ட வரம்புகளை மீறிய நீண்ட வேலை நேரம், உரிய ஊதியம் இன்மை.
- பொறுப்பைத் தவிர்க்க தற்காலிக மற்றும் அசாதாரண ஒப்பந்தங்களின் அதிகரிப்பு.
- அடிப்படை வாழ்க்கை செலவுகளுக்கே போதாத சம்பள அமைப்புகள்.
- உடல் மற்றும் உளநலத்தை பாதிக்கும் உற்பத்தி இலக்குகள்
- தொழிற்சங்கங்களை அடக்குதல் மற்றும் தொழிலாளர் தலைவர்களுக்கு எதிரான பழிவாங்குதல்கள்.

அதே சமயம், பெண்கள் ஊதியமில்லா பராமரிப்பு பணியின் மறைந்த சுமையை சுமக்கின்றனர். தேசிய பராமரிப்பு அமைப்பு இல்லை, போதுமான குழந்தைகள் பராமரிப்பு வசதி இல்லை, பெண்களின் இரட்டை வேலையை அங்கீகரிக்கும் அமைப்பு இல்லை, அதற்கு பதிலாக, “தொழில் நெகிழ்வு” சீர்திருத்தங்கள் பெண்களிடமிருந்து மேலும் உழைப்பை சுரண்ட முயல்கின்றன.

பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல்கள் ஆடைத் துறையில் ஆழமாக பதிந்துள்ளது. தொழிற்சாலையிலிருந்து போக்குவரத்து மற்றும் தங்குமிடங்கள் வரை பிரச்சினைகள் தொடர்கின்றன. இவை தனித்தனி சம்பவங்கள் அல்ல. அமைப்புசார்ந்த பிரச்சினைகள்.

சட்ட பாதுகாப்புகள் இருந்தபோதும், சங்கம் அமைக்கும் சுதந்திரம் குறைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிற்சங்க எதிர்ப்பு, அச்சுறுத்தல்கள் மற்றும் கண்காணிப்புகள் அதிகரிக்கின்றன. தொழிலாளர்களுக்கு சங்கங்கள் அமைப்பதற்கான, பேசுவதற்கான மற்றும் கூட்டாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இதேவேளை, அரசு, நிறுவன மற்றும் உலகளாவிய நலன்களுடன் இணைந்து செயல்பட்டு, தொழிலாளர்களை பாதுகாப்பதில் தோல்வியடைந்து, கொள்கைகளின் மூலம் சுரண்டலை ஊக்குவிக்கிறது.

ஒவ்வொரு நெருக்கடிகளையும் தொழிலாளர்கள் மட்டுமே சுமக்கும் அமைப்பை நாம் ஏற்க மறுக்கிறோம்.

**2026 ஆம் ஆண்டிற்கான எங்கள் கோரிக்கைகள் அவசரமானவை மற்றும் பேச்சுவார்த்தைக்கு உட்படாதவை:**

- வேலை பாதுகாப்பை உறுதி செய்து, இழப்பீடு இல்லாத பணி நீக்கங்களையும் தொழிற்சாலை மூடல்களையும் உடனடியாக நிறுத்துக.
- **உண்மையான வாழ்வாதார சம்பளத்தை** உறுதி செய்து, **குறைந்தபட்ச ஊதியத்தை** நடைமுறைப்படுத்துக.
- **8 மணி நேர வேலை** நாளை கடுமையாக அமுல்படுத்தி, கட்டாய மற்றும் ஊதியமில்லா கூடுதல் நேரத்தை நிறுத்துக.
- தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்து அசாதாரண வேலைவாய்ப்பை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்.
- ஊதியமில்லா பராமரிப்பு பணியை அங்கீகரித்து, **தேசிய பராமரிப்பு அமைப்பை** உருவாக்குக.
- தொழிலாளர் சட்டங்களை பலப்படுத்துக - பலவீனப்படுத்த வேண்டாம்.
- சுரண்டலான உற்பத்தி இலக்குகளை நீக்கி, **அரசின் கண்காணிப்பை தொழிற்சாலைகளில்** அறிமுகப்படுத்துக.
- தொழிற்சங்க சுதந்திரத்தை உறுதி செய்து, தொழிற்சங்க எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்.
- பாலின அடிப்படையிலான வன்முறைக்கு பூச்சிய சகிப்புத்தன்மை.
- ஊதியத்துடன் கூடிய விடுப்புகள் - உடல்நலம், கர்ப்பம், பெற்றோர் விடுப்பு
- 24 மணி நேர, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு
- விரிவான சமூக பாதுகாப்பு அமைப்பு
- தங்கள் சொந்த மாவட்டத்திற்கு வெளியே வாழும் தொழிலாளர்களுக்கான வாக்குரிமை

மேலும், சர்வதேச பிராண்டுகள் தங்கள் விநியோக சங்கிலிகளில் உள்ள தொழிலாளர் நிலைமைகளுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

பெண் தொழிலாளர்கள் வெறும் தொழிற்சாலை தொழிலாளர்கள் அல்ல - அவர்கள் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளனர்.

இது முடிவடைய வேண்டும்.

இந்த மே தினத்தில், கட்டுநாயக்கவிலிருந்து, நாம் ஒருங்கிணைந்த எதிர்ப்புக் குரலை எழுப்புகிறோம் - சுரண்டலுக்கு எதிராக மட்டுமல்ல, நீதியும் மரியாதையும் பராமரிப்பும் தொழிலாளர் அதிகாரமும் கொண்ட எதிர்காலத்திற்காக.

**எங்கள் உழைப்பு மலிவானது அல்ல. எங்கள் உயிர்கள் வீணானவை அல்ல.**

**அனைவருக்கும் மரியாதைக்குரிய வேலை – சமூக நீதியும் பொருளாதார முன்னேற்றமும்!**

தொழிலாளர் ஒற்றுமைக்கு அதிகாரம்!

அனைத்து பெண் தொழிலாளர்களுக்கும் கௌரவமும் நீதியும்!

No. 221, Welaboda Road, Katunayake, Sri Lanka.
Tel: +94 11 4 851 383 | Email: dabindu.infoco@gmail.com | Web: www.dabinducollective.org | Registration No - 9194